நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

## அவசரக்கூட்டம் 24/06/2021 வியாழக்கிழமை,

**பொருள் எண்.1**

நெல்லியாளம் நகராட்சியானது நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சி 1933 ஆம் ஆண்டு ஊராட்சியாக அமைக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை பேரூராட்சியாக தரம் உயத்தப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதல் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டு தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 09.08.2010 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியின் பரப்பளவு 94.28 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சியின் மக்கள் தொகை 44590 ஆகும். நகராட்சியானது 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சி பகுதியில் மொத்த சொத்துவரி குடியிருப்பு 11459இல் குடிநீர் வரிவிதிப்புகள் 830 ஆகும். அதில் 819 எண்ணிக்கை வீட்டு குடிநீர் இணைப்புகளும் 11 எண்ணிக்கை வணிக குடிநீர் இணைப்புகளும் உள்ளது. தொழில் நிறுவனம் குடிநீர் இணைப்பு ஏதும் இல்லை. மேலும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்காக 296 எண்ணிக்கை பொது குடிநீர் குழாய்களும் உள்ளது.

**Table – I**

**2020-2021-ன்படி தணிக்கை செய்யப்படாத விவரம் (Unaudited Report)**

| வ.எண் | தலைப்பு | வரவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | குடிநீர் வரி | 4.86 |
| 2. | சொத்துவரியில் குடிநீர் பங்குத்தொகை | 15.42 |
| 3. | இதர வருவாய் | 2.78 |
| | **மொத்தம்** | **23.06** |
| **வ.எண்** | **தலைப்பு** | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
| 1. | ஊதியம் | 47.75 |
| 2. | மின்கட்டணம் (120 எண்ணிக்கை மின்மோட்டார்களின் மின்கட்டணங்களும் சேர்த்து) | 29.21 |
| 3. | வாகன பராமரிப்பு | 4.45 |
| 4. | இதர பராமரிப்பு செலவினம் | 26.53 |
| | **மொத்தம்** | **107.94** |

**Table – II**

இந்நகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி

| வ.எண் | வருடம் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1. | 1981 | 25446 |
| 2. | 1991 | 37787 |
| 3. | 2001 | 41837 |
| 4. | 2011 | 44590 |

**Table – III**

Arithmetic Increase Method-ன்படி

| வ.எண் | தலைப்பு | வருடம் | மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1. | Immediate | 2021 | 50990 |
| 2. | Intermediate design year | 2031 | 57,390 |
| 3. | Ultimate design year | 2041 | 63,790 |

**1) திட்டத்தின் அவசியம்**

நெல்லியாளம் நகராட்சியில் தற்போது தேவாலா ஏரோடு, நீர்மட்டம் மற்றும் சோலமலை ஆகிய மூன்று இடங்களில் உள்ள தடுப்பணை மூலமாகவும், 103 எண்ணிக்கை திறந்த வெளிக்கிணறுகளில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டும் நேரிடையாக 4.10 எம்.எல்.டி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி 103 எண்ணிக்கை திறந்தவெளி கிணறுகளில் 10 எண்ணிக்கை அடர்ந்த வனத்துறை சார்ந்ததால் மின்இணைப்பு இல்லாமல் டீசல் என்ஜின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நகராட்சியில் குடிநீர் சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வறட்சி காலங்களில் வாரம் இரண்டு முறை அல்லது ஒரு முறை நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 42 லிட்டர் வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. பெரும்பாலான திறந்தவெளி கிணறுகள் வறட்சி காலங்களில் குடிநீர் வற்றுவதால், வாடகை லாரி மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது நகராட்சியில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 38512 மக்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள மக்கள் அடர்ந்த வனப்பகுதியில் உள்ள நீர்ஆதாரத்தை பயன்படுத்துகிறார்கள்.

இந்நகராட்சியில் தற்போது உள்ள பொதுமக்களுக்கும், பெருகி வரும் மக்கள் தொகையின் அடிப்படையில் இன்னும் 20 ஆண்டுகளுக்கான தொலைநோக்கு பார்வையின்படி பாதுகாக்கப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட வறட்சி காலங்களிலும் தங்கு தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு புதியதாக குடிநீர் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

**2) குடிநீர் பிரதான குழாய்**

தற்போது நகராட்சியில் திறந்தவெளி கிணறுகள், தடுப்பணைகள் மூலமாக குடிநீர் குழாய்கள் வழியே தரைமட்ட நீர்தேக்கத்தொட்டிகளுக்கு குடிநீர் உந்துக்குழாய்கள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மேற்க்கண்ட திட்டங்களுக்கு பொருத்தப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள் பல இடங்களில் கனரக வாகனங்களால் உடைக்கப்பட்டும், மேலாக பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் யானைகளால் சேதப்படுத்தப்பட்டும், பழைய குழாய்கள் துருப்பிடித்து உடைந்த நிலையில் நீர்கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாகி செல்வதால், சீராக பல பகுதிகளுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை.

**3)பகிர்மான குழாய்**

நெல்லியாளம் நகராட்சி முழுவதும் மலை பிரதேசம் ஆகும். மேலும் இப்பகுதி மேடு பள்ளமாகவும், அனைத்து பகுதிகளும் ஏற்றத்தாழ்வாகவும் உள்ளதால் குடிநீர் பகிர்மான குழாய்கள் 50mm, 40mm, 32mm, 25mm, 20mm G.I மற்றும் HDPE Pipe மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் பெரும்பாலான குடிநீர் விநியோக குழாய்கள் சாலையின் மேலாக பதிக்கப்படுவதால் வாகனத்தினாலும், யானை மிதித்தும் பழுது ஏற்படுகிறது. இதனை தவிர்ப்பதற்கு HDPE 25 kg குழாய்கள் தேவைக்கேற்ப பதிக்கவும் திட்டம் தயார் செய்யப்பட வேண்டும்.

**4)மேல்நிலைத்தொட்டி**

நெல்லியாளம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டிகள் பெரும்பாலும் மிகவும் பழுது ஏற்பட்டு நீர்கசிவுகள் உள்ளன. மேலும் தேவையான அளவிற்கும் கொள்ளளவும் குறைவாக உள்ளதாலும் புதியதாக மேல்நிலைத்தொட்டிகள் கட்டப்படவேண்டும்.

**5) வீட்டு குடிநீர் இணைப்புகள்**

மேலும் குடிநீர் இணைப்புகள் Pit tap தவிர்க்கவும், சீராக குடிநீர் விநியோகம் செய்யவும் அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கும் Flow Control Valve உடன் MDPE பொருத்தப்பட வேண்டும்.

இந்நகராட்சி பகுதியில் உள்ள கிளின்ராக், மூச்சிக்குன்னு, முண்டக்குன்னு, தேவாலா ஏரோடு, நீர்மட்டம் மற்றும் சோலமலை ஆகிய இடங்களில் தடுப்பணைகள் கட்டியும், மேம்படுத்தியும் மேற்படி நீர் ஆதாரத்தை கொண்டு நகராட்சி பகுதியில் உள்ள ஆமைக்குளம், நாடுகாணி, தேவாலா, பந்தலூர் மற்றும் உப்பட்டி ஆகிய முக்கிய மக்கள் வாழும் பகுதிகளுக்கு குடிநீர் மேல்நிலை தொட்டி அமைக்கப்பட்டு அதன்மூலம் குடிநீர் விநியோகம் செய்யவேண்டும். நகராட்சியில் உள்ள அனைத்து மக்களுக்கும், எதிர்கால மக்கள்தொகைக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆலோசகர் Consultant நியமிக்கவும் அதற்கான செலவினத்தை மானியமாக கோர மன்றத்தின் அனுமதிக்கும், தனி அலுவலரின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.2</u>

வட்டாட்சியர் பந்தலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ2/1293/2016, நாள்.05/07/2021–ல் பந்தலூர் வட்டம், நெல்லியாளம் கிராமம் 1, புல எண்.2299/1, 4–ல் 0.15 ஏக்கர் மற்றும் 0.90 ஏக்கர் "மேய்க்கால்" என்று வகைப்பாடு கொண்ட நிலத்தினை நீதிமன்ற கட்டிடம் மற்றும் நீதிமன்ற அலுவலர் குடியிருப்பு கட்டிடம் கட்ட நிலமாற்றம் செய்யப்பட்ட நிலத்திற்கு மாற்று நிலமாக நெல்லியாளம்–1 கிராமம், புல எண்.2134/1 காலையில் 2.10 (இரட்டிப்பு 1.05 ஏக்கர்) நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பொருள் தொடர்பாக நகராட்சி தனி அலுவலர் கூட்டத்தில் தீர்மானம் இயற்றி தீர்மானம் நகல் வழங்க கோரியுள்ளதால் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்,(கூ.பொ)
நெல்லியாளம் நகராட்சி

24/6/21

நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

**<u>சாதாரணக்கூட்டம் 30 /06 /2021 புதன்கிழமை,</u>**

**<u>பொருள் எண்.1</u>**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட கைதக்கொல்லி மற்றும் வாளவயல் ஆகிய பகுதியில் கிணறு ஆழப்படுத்த வேண்டியுள்ளது. மேலும் கைதக்கொல்லியில் குடிநீர் குழாய், HDPE டேங்க், Iron Stage ஆகியவற்றை அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிகள் செய்வதற்கு ரூ.6.45/— லட்சம் செலவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி 1920 பிரிவு 15—ன் கீழ் பணிகளை மேற்கொண்டமைக்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.செய்தலவி, ஒப்பந்ததாரருக்கு ரூ.6.45/— தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி அளிக்கலாம்.

**<u>பொருள் எண்.2</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கு திறந்தவெளி கிணறு, தடுப்பணைகள், ஊற்றுகள் மற்றும் ஆழ்துளைக்கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நடப்பு வருடம் பருவ மழைப்பொய்த்து விட்டதால் நகருக்கு குடிநீர் தற்போது சிராக விநியோகம் செய்ய இயலவில்லை . இந்நிலையில் கூடுதலாக 6500 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 2 எண்கள் லாரிகள் மூலம் இரண்டு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும் அவசியமாக உள்ளது. எனவே மேற்கண்ட லாரிகள் 1 மாதத்திற்கு வாடகைக்கு அமர்த்த தோராயமாக ஆகும் செலவினம் ரூ.9.80 இலட்சம் இச்செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதிகள் 1920 பிரிவு 15ன் கீழ் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.செய்தலவி, ஒப்பந்ததாரருக்கு ரூ.9.80/— தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராசிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகத்திற்கு 110 மின் மோட்டார்கள் 10 டீசல் எஞ்சின்கள் மொத்தம் 120 குடிநீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு அறைகளிலுள்ள மின்மோட்டார்கள் மற்றும் டீசல் எஞ்சின்கள் இயக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த பகுதிகளில் உ.ள் நபர்களை வைத்து மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநூர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு இயக்கும் பணிக்கான ஒப்பந்தக்காலம் 31.07.2020 உடன் முடிவடைந்து விட்டதால் 01.08.2020 முதல் 31.12.2020 முடியவும், 01.01.2021 முதல் 31.03.2021 முடிய மூன்று மாத காலங்களுக்கு திரு.தேவேந்திரன் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்திலேயே நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் பட்டியல் தொகை வழங்கவும் நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. தற்போது 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற இருப்பதை முன்னிட்டு 01.04.2021 முதல் 30.06.2021 முடிய மேலும் மூன்று மாத காலங்களுக்கு திரு.தேவேந்திரன் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி நீடிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டடுள்ளது. தற்போது ஜுலை 2021 ஒரு மாத காலத்திற்கு திரு.தேவேந்திரன் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி நீடிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகராட்சி பொது சுகாதாரப் பணிகளுக்கென வாகனங்கள் இயக்க 2 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் 01/04/2020 முதல் 31/03/2021 முடிய ஒராண்டுக்கு நியமனம் செய்து பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்தம் மீண்டும் 31/03/2021 நிறைவு அடைவதால் கோவிட்–19 காலங்களில் அவசரப் பணிகள் நடைபெற்று வருவதால், தற்போது சட்டமன்ற தேர்தல் நடத்தைவிதிகளின்படி 01/04/2021 முதல் 31/05/2021 முடிய நகர்மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் கோவிட்–19 காலங்களில் பணிகள் உள்ளதால் 01/06/2021 முதல் 30/06/2021 ஒரு மாதத்திற்கு தனி அலுவலரின் அனுமதி பெற்று திரு.J.பிஜு, J.P.Traders என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொண்டதும், பட்டியல் தொகை வழங்கியதும் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.5**

நெல்லியாளம் நகராட்சி அலுவலகத்திற்கு புள்ளிவிவர குறிப்பாளர் ஒரு நபரை ஒப்பந்த அடிப்படையில் 01/04/2020 முதல் 31/03/2021 முடிய ஒராண்டுக்கு நியமனம் செய்து பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்தம் மீண்டும் 31/03/2021 நிறைவு அடைவதால் கோவிட்–19 காலங்களில் அவசரப் பணிகள் நடைபெற்று வருவதால், தற்போது சட்டமன்ற தேர்தல் நடத்தைவிதிகளின்படி 01/04/2021 முதல் 31/05/2021 முடிய நகர்மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் கோவிட்–19 காலங்களில் பணிகள் உள்ளதால் 01/06/2021 முதல் 30/06/2021 ஒரு மாதத்திற்கு தனி அலுவலரின் அனுமதி பெற்று திருவாளர்.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்திலேயே நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொண்டதும், பட்டியல் தொகை வழங்கியதும் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பணிகளுக்கென 50 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்கு நிர்வாக அனுமதி பெறப்படாததால் ஏற்கெனவே ஆட்களை பணிக்கு அனுப்பி வரும் திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ், கூடலூர் நிறுவனத்தின் பணி உத்திரவு நீட்டிப்பு பெற்று 01/02/2021 முதல் 28/02/2021 முடிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற இருப்பதாலும், ஒப்பந்தப்புள்ளி கோரி ஆட்களை பணியமர்த்துவதற்கான நிர்வாக அனுமதி கிடைக்கப்பெறாத சூழ்நிலையாலும், பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதியும், நிரந்தர பணியாளர்கள் பற்றாக்குறையாலும் பணிகளை மேற்கொள்வதற்கு 01/04/2021 முதல் 31/05/2021 முடிய நகர்மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் கோவிட்–19 காலங்களில் பணிகள் உள்ளதால் 01/06/2021 முதல் 30/06/2021 ஒரு மாதத்திற்கு தனி அலுவலரின் அனுமதி பெற்று திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ், கூடலூர் நிறுவனத்தின் பணி உத்திரவு நீட்டிப்பு செய்து, மேற்படி நிறுவனத்தின் மூலம் ஆட்களை அனுப்பும் பணி மேற்கொண்டதும், பட்டியல் தொகை வழங்கியதும் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.7**

நெல்லியாளம் நகராட்சி பொது சுகாதாரப் பணிகளுக்கென வாகனங்கள் இயக்க 2 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு தற்போது பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்தம் 30/06/2021 உடன் முடிவடைவதால் 01/07/2021 முதல் 31/07/2021 வரை ஒரு மாத காலத்திற்கு திரு.J.பிஜூ, J.P.Traders என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் பட்டியல் தொகை வழங்கவும் தனி அலுவலரின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.8**

நெல்லியாளம் நகராட்சி அலுவலகத்திற்கு புள்ளிவிவர குறிப்பாளர் ஒரு நபரை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு தற்போது பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்தம் 30/06/2021 உடன் முடிவடைவதால் 01/07/2021 முதல் 31/07/2021 வரை ஒரு மாத காலத்திற்கு M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்திலேயே நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் பட்டியல் தொகை வழங்கவும் தனி அலுவலரின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.9**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பணிகளுக்காக 50 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் M/s.அட்சயா அசோசியேட்ஸ், கூடலூர் என்ற நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தம் 30/06/2021–ல் முடிவடைவதால் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01/07/2021 முதல் 31/07/2021 வரை அத்தியாவசிய பணி என்பதால் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து அதற்கான பட்டியல் தொகை வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.10**

நெல்லியாளம் நகராட்சியில் தென்மேற்கு பருவமழை காலங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு முன்னெச்சரின்கை நடவடிக்கையாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன்படி Nilgiris A to Z தேவேந்திரன் என்பவர் மூலம் ரூ.41130/– பெறப்பட்டு தொகை வழங்கியது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.11**

நெல்லியாளம் நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்று பணிகளில் தனிமைபடுத்தப்பட்ட பகுதிகளாக தடுப்பு வேலிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன்படி Nilgiris A to Z தேவேந்திரன் என்பவர் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.460/– என்ற விலையில் அமைக்கப்பட்டு பணிகள் தொடரப்பட்டு வருகிறது. மேலும் தொகை ரூ.20240/– வழங்கியது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு தொகை வழங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்று முன்னெச்சரிக்கை நடடிவக்கை விழிப்புணர்வு Flex பெறுதல் பணிகளை ரூ.114400/–ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன்படி ஸ்ரீ கிருஷ்ணா ஆப்செட் பிரிண்டர்ஸ், கூடலூர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது மற்றும் தொகை வழங்கியது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகளில் நகராட்சியில் வாகனங்கள் குறைவாக இருப்பதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன்படி Nilgiris A to Z தேவேந்திரன் என்பவர் மூலம் இரண்டு வாகனங்கள் நாள் ஒன்றுக்கு ரூ.1275/– (வாகனம் ஒன்றுக்கு) அனுப்பப்பட்டு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி 15 நாட்களுக்கு தொகை ரூ.19125/– வழங்கியது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் தொடர்ந்து வாகனங்களை அனுப்பியதற்கு தொகை வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி இரு வாகனங்களுக்கு நகராட்சி மூலம் எரிபொருள் வழங்கியதற்கு தொகை ரூ.40045/– வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.14**

நெல்லியாளம் நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்று பணிகளில் தனிமைபடுத்தப்பட்ட பகுதிகளுக்கு Nilgiris A to Z தேவேந்திரன் என்பவர் மூலம் ரூ.4600/– மற்றும் ரூ.4140/–க்கு கயிறு பெறப்பட்டது மற்றும் தொகை வழங்கியது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தனி அலுவலர்,(கூ.பொ)
நெல்லியாளம் நகராட்சி

30/6/21